
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :29 January 2026
கோட்டை:8 வாயில்:29 ஜனவரி 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD


**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.



**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# தமிழ்

# மாதவியின் சதுர்கலைகளின் அறிவியல் நோக்கும், அதன் பயனும்

# *The Scientific Purpose and Benefits of Madhavi's Chaturkalai*

**முனைவர் அ.சுகந்தி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), கடலூர் - 1 https://orcid.org/0009-0003-0840-6355

***Dr A.Suganthi,*** *Assistant Professor, Department of Tamil, St.Joseph's College of Arts and Science(Autonomous), Cuddalore - 1.* https://orcid.org/0009-0003-0840-6355

*Abstract*

*The History of Tamil literature is classified into the sangam period, the sangam era, the kapiya period, the Bhakti literary period and the medieval literary period. It is said the the twin kapiyas, Silappathikaram and Manimekalai, were composed during the period considered by literary scholars to be the Samgam era. In the Silappathikaram, which is praised as the citizen kapiyam, Kovalan kannagi, Along with Madhavi's life. The Chaturkalas of Madhavi and the fact that Kovalan's life was connected to Madhavi through Madhavi's dance can be understood through Silappathikaram. This research article aims to investigate Madhavi's Chaturkalas from a scientific perspective.*

***Keyword:*** *Chaturgalai, Aadrkalai, Mayon, Flagpole Market*

**ஆய்வு சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றினை சங்ககாலம், சங்கமருவிய காலம், காப்பிய காலம், பக்தி இலக்கிய காலம், இடைக்கால இலக்கிய காலம், நவீன இலக்கிய காலம் என வகைப்படுத்துவர். இலக்கியத்திறனாய்வாளர்கள் சங்கமருவிய காலம் என்று கருதப்படுகின்ற காலத்தில் இரட்டைக்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை படைக்கப்பட்டதாக கூறப்பெறுகின்றது. குடிமக்கள் காப்பியம் என்று போற்றப்படும் சிலப்பதிகாரத்தில், கோவலன், கண்ணகி, வாழ்வியலோடு மாதவியின் சதுர்கலைகளும், மாதவியின் ஆடலினால் கோவலனின் வாழ்க்கை மாதவியோடு இணைந்திருந்தமையும் சிலப்பதிகாரம் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. மாதவியின் சதுர்கலைகள் பற்றி அறிவியல் பார்வையுடன் ஆராய்வதாக இந்த ஆய்வுகட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** சதுர்கலை, ஆடற்கலை, மாயோன், கொடிகொட்டி, கடையம்

**முன்னுரை**

சிலப்பதிகாரத்தில் ஆடல்கலைகளை அறிவியல் உண்மைகளோடு ஒப்பிட்டுக் காண்பது அவசியமாகும். மனதளவில் பாதிக்கப்பட்ட சூழலிலும், உடலளவில் பாதிக்கப்பட்ட சூழலிலும் பெண்கள் ஆடற்கலைகள் வழியாக மன அறிவியல் மற்றும் உடல் அறிவியல் கொண்டு ஒப்பிட்டு உணர்ந்தவற்றை இக்கட்டுரையின் மூலம் ஆராயப்படுகிறது.

**மனமும் அறிவியல் நோக்கும்**

மனம் மனிதனை இயக்குகின்றது. மனதை ஒரிடத்தில் நிறுத்தி வைப்பது கடினமான செயலாகும். மனமே மனிதனின் அடிப்படையாகும். மனம் போல் வாழ்வு, மனமிருந்தால் மார்க்கமுண்டு, மனம் கொண்டது மாளிகை என்பன போன்ற பழமொழிகள் மனத்தின் ஆளுமைத் திறத்தை வெளிப்படுத்துகின்றன.

**“மனமான வாரைக் கைம்மாலை ஆகாமல் எனையாள்**

**அடிகள் அடிஎய்துநாள் எந்நாளோ?”**

என்று தாயுமானவர் கூறுவதோடு, மனம் என்னும் குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலை போலாகாமல் என்னை ஆள்கின்ற இறைவனுடைய திருவடியை அடையும் நாள் எந்நாளேர் என்று ஏங்குகிறார். **“மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்”** என்று திருமூலர் கூறும் கருத்து மனவளத்தின் மகிமையை ஆற்றலை இனம் காணச் செய்கின்றது. மேலும், அவர் **“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்”** என்று மனதின் புனிதத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**திருக்குறளும், மன அறிவியலும்**

**“மனத்துக்கண் மாசிலன் ஆதல்...”**

**“உள்ளத்தால் பொய்யா தொழுகின்...”**

என்று திருவள்ளுவர் மனத்தின் இன்றியமையாமை குறித்துப் பல கருத்துக்களைத் தெளிவுப்படுத்துகிறார். மனத்தின் செயல் முறைகளைப் பற்றி உளவியலில், **“மனிதனின் நடத்தையை அறியும் ஒரு விஞ்ஞானம் ஆகும்”** என்று உளவியல் அறிஞர் தா.ஏ.சண்முகம் குறிப்பிட்டுள்ளார்.

**அறிவியல் நோக்கும் ஆடல் கலைகளும்**

ஆடல் கலைகளின் வழியாக மனதை ஒருநிலைப்படுத்தி ஆற்றலையும். உடல் உறுப்புகளின் இயல்பையும், எண்ணத்தையும் நிலைநிறுத்தி சமூகத்தையும், உலகையும் வளப்படுத்தி நேர்வழியில் வாழ வழிகாட்டும் எனலாம்.

மனிதன் பேசத் தெரியும் முன்பே முகக்குறி, கைக்குறிகளாலும் உறுப்பசைவுகளாலும், தன் உணர்ச்சியையும் கருத்தையும் வெளியிட்டான். ஆதலால் மொழிக்கும் அசைக்கும் முன்பே நடனம் இருந்தது. மொழியும் இசையும் சேர்ந்து நடனக்கலைக்கு ஒரு வடிவம் ஈர்த்தன. சொல்லிற்கேற்ற கைக்குறி, கண்குறிகளும் சொல்லாலான இசைகளுக்கேற்ற ஆட்டங்களும் இயற்கையாகவே உண்டாயின.

இசைக்கேற்றபடி இராக தாளங்கள் உண்டாயின. இராக தாளங்களுக்கு முதலில் குரலும் கைகளும் பயனாயின, பிறகு மனித அறிவும், சுவையும் முதிர முதிரப் புதிய புதிய இசைக்கருவிகளும் ஆடல் பாடல்களின் முறை வைப்புகளும் அபிநயலட்சணங்களும் எழுந்தன. யாழ், குழல், முழவு முதலிய கருவிகள் மனிதக்குரலை இன்புறுத்தித் துணைச்செய்தன. இவ்வாறே இயற்கையான நடனம், பல கலைநுணுக்கங்களுடன் வளர்ந்து ஒரு சாத்திரமானது. இலக்கணமும், இலக்கியங்களும் வகுத்தனர். நடனக்கலையின் இயற்கையான வரலாற்றைக் கொண்டு, இன்ப இயல்பூக்கங்களே உள்ளத்தின் ஆற்றலுக்கெல்லாம் முதன்மையானது என்னும் அடிப்படையில் வரலாறு தோன்றக் காரணமாயிற்று எனலாம்.

**மாதவியின் ஆடற்கலையில் அறிநெறி ஒழுக்கம்**

மாதவியின் கூத்து நடனத்தில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு அறிநெறி ஒழுக்கங்களையும் வெளிப்படுத்தியுள்ளதைக் காணமுடிகின்றது. மனதில் தளர்ந்தவர்களை வீறு கொண்டு செயலாற்றிட வைத்தல் வேண்டும். கலையின்பம் வேண்டுவோருக்கு கலையின்பத்தையும், பேரின்பம் வேண்டுவோருக்கு பேரின்பம் கொடுக்க வேண்டும். வியப்புச் சுவை, கோபம், கருணை, இழிவு, அமைதி, அச்சம், துன்பம், நகைச்சுவை, வீரம் என்னும் ஒன்பது சுவைகளையும் மாதவி தன் ஆடல்கலைகள் மூலம் வெளிப்படுத்தி மன்னனின் மனதையும், ஆடல் கலைகளைக் கண்டுகளித்தவர்களுக்கும், குறிப்பாக, கோவலனின் மனதில் ஒருவிதமான நிறைவையும் ஏற்படுத்தியவளாக இளங்கோவடிகள் படைத்துள்ளமை மன அறிவியலுக்கும், உடல் அறிவியலுக்கும் தக்க சான்றுகளாகின்றன.

ஒருவருடைய ஆளுமை வெளிப்பாடு என்பது உணர்ந்து செயல்படுவது. இதனை மாதவியின் வழியாக இளங்கோவடிகளும், உரை வகுத்த அடியார்க்கு நல்லாரும் பிற உரையாசிரியர்களும் நன்கு உணரவைக்கின்றனர்.

மன அறிவியலும் உடல் அறிவியலும் இணைந்ததே ஆடல்கலைகளின் வெளிப்பாடாகும். எவ்வாறெனில், மனதில் தோன்றும் எண்ணங்களே உடல் அசைவுகளாகின்றன. எனவே, எண்ணங்களாக உள்ள உணர்ச்சிகள் ஒன்பது சுவைகளாகின்றன. ஒன்பது சுவைகளையும் உடல் அசைவுகளில் வெளிப்படுத்தும் வகையில் மாதவியின் ஆடல்கலைகளில் அறிய முடிகிறது.

**மாதவியின் ஆடல்கலைகளில் மன அறிவியலும், உடலறிவியலும்**

ஆடல் அரங்கில் மாதவியின் ஆடல் அரங்கேற்றத்தின் முதல் நிகழ்ச்சியாகத் தெய்வப்பாடல்களைப் பாடினர். திருமாலின் புகழ்பாடுவதை மாயோன் பாணி என சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளது. வருணப்பூதர் புகழைப் பாடியும், திங்களைப் போற்றிப் பாடியும் உள்ளதை **"வானூர் மதியம்பாணி"** எனப்பட்டது.

சிவன் திரிபுரம் எரித்த உடன் பார்வதியோடு சுடுகாட்டில் ஆடிய ஆட்டம் **"கொடிகொட்டி"** எனப்பட்டது. **"பொன், வெள்ளி, இரும்பு என்ற மூவகைப் பொருள்களால் ஆன மூன்று கோட்டைகளில் தங்கி, அரக்கர்கள் தமக்குப் பகைவரான தேவர்களை அழித்து வந்தனர். தேவர்கள் சிவபிரானிடம் முறையிட அவர் தீயை ஏவி, அவர் கோட்டைகளை அழித்து, அழித்த சாம்பல் மீது தாம் நின்று தாண்டவமாடினார். அங்ஙனம் இரக்கமில்லாது அழித்து ஆடினதால் இவ்வாடலுக்குக் கொடு கொட்டியாடுதல் எனப்பெயர் வந்தது"** என ஆர்.கே.சண்முகம் செட்டியார் தன் நூலான புகார்க்காண்ட உரையில் கூறியுள்ளார்.

**மாதவியின் பதினொருவகை நடத்தின் சிறப்பு**

கலைமகன் பிரமன் காணத் தேர்முன் ஆடியது **"பாண்டரங்கம்"** எனப்பட்டது. கம்சனைத் துவம்சம் செய்த கண்ணன் அவனைத் குத்தி விழ்த்திய நிகழ்ச்சி **"அல்லயத் தொகுதி"** எனப்பட்டது.

கண்ணன் தன்னை எதிர்த்த வாணா சூரனை எதிர்த்து அவளைக் களத்தில் வீழ்த்திய செய்தி **"மல்லின் ஆடல்"** எனப்பட்டது.

கடலில் சூரபத்மனை எதிர்த்து முருகன் போர் தொடுத்தான். அதைச் சித்தரித்துக் காட்டியது **"துடிக்கூத்து"** எனப்பட்டது.

அவுணரோடு போர் செய்த முருகன் அவர்களை வெற்றி கொண்டு குடைப்பிடித்து ஆடியது **"குடைக்கூத்து"** எனப்பட்டது.

வாணன் பேரூர்த் தெருக்களில் நீள்நிலம் அளந்த திருமால் ஆடியக் கூத்து **"குடக்கூத்து"** எனப்பட்டது.

ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்தில் மன்மதன் ஆடியக்கூத்து **“பேடிக்கூத்து”** எனப்பட்டது.

அசுரர்கள் தாம் தாங்கிய போர்க் கோலத்தைத் தவிர்த்து ஓடத் தூர்க்கை வெற்றி கொண்ட செய்தி **“மரக்கால் ஆடல்”** எனப்பட்டது.

அவுணரை எதிர்த்து திருமால் வெற்றி கொண்ட செய்தியைச் செப்புவது **“பாவைக்கூத்து”** எனப்பட்டது.

வாணன் ஊரில் வடக்கு வாயிலில் இந்திராணி வெற்றி கொண்ட செய்தி **“கடையம்”** எனப்பட்டது.

இப்பதினொருவகை ஆடல்களையும் மாதவி அவ்வவ் வேடங்களில் அவ்வவ் மரபுகள் வழுவாமல் நடித்து நாட்டியம் ஆடி நாட்டவரை மகிழ்வித்;தாள்.

**மாதவியின் ஆடல்கலைகளும் உடலசைவுகளும்**

மாதவி ஆடற்கலையைக் கற்றுக் கொண்டு உலகை மகிழ்விக்கும் தொழிலை அவள் ஏற்கிறாள். பண்ணொலிகள் அவளைப் பண்படுத்தி வந்தன. அவள் பேச்சில் அசைவில் இனிமை தவழ்கிறது. அவள் அழகின் தேவதை என்று ஆராதிக்கப்படுகிறாள். கலை வாழ்க்கைக்காகவே என்பது மாதவியின் நோக்கமாக இருந்தது.

மாதவியின் பதினொரு வகை ஆடல்கலைகளின் வழியாக, உடலசைவுகளும், ஒன்பான் சுவைகளும் அறிய முடிகின்றது. இதனால் ஆடல் கலைகளில் பயிற்சி இல்லையென்றாலும் கூட இதனைக் கற்பதன் வழியாக உடலசைவு மொழிகளையும், உணர்வு வெளிப்பாட்டையும் உணர்ந்து ஆளுமைத் தன்மையை மேம்படுத்திக் கொள்ள வழிவகுக்கின்றது.

கண், வாய், கைகளை அகல விரித்தல், அங்காத்தல், கையைக்கொட்டி முகவாய்க் கட்டையில் வைத்தல், உடல் ஒரே நிலையில் தம்பித்தல், ஆச்சரியமாகி பேச்சடைத்தல் ஆகிய உடலசைவுகள் வியப்புச்சுவையை உணரவைக்கின்றன.

மூக்கு விரிதல், கண் சிவத்தல், நெருப்பெழிப் பார்த்தல், விழியை உருட்டல், நெற்றி சுருங்கல், புருவங் குவித்தல், கழுத்து விடைத்தல், தலையை வக்கரித்து ஆட்டல், தையிறுகல், விரல்களை மடக்கிக்குத்தல், காலை அழுத்தி மிதித்தல், கை ஓங்கல், உடல்படபடத்தல், நறநறவென்று பல்லைக்கடித்தல் போன்ற உடலசைவுகளால் சினத்தை உணரவைக்கின்றன.

கையால் தடுத்தல், விரல்களை உதறல், முகவிகாரம், பல் இறுகல், கண்டிப்பான பேச்சுக்குரல், ஆத்திரம், சினம், முகச்சுளிப்பு ஆகிய உடலசைவுகள், வெறுப்புணர்வை அறியவைக்கின்றது.

முகவாட்டம், மார்தட்டி அகந்தை பேசல், வயிற்றெறிதல், வயிற்றைத் தடவல், பல்லைக்கடித்தல், கையை நெறித்தல், கண்ணை உருட்டிப்பார்த்தல், மந்தமாகச் சிந்தித்தல், அழுதல், ஆவலாதி, மார்பில் அடித்துக் கொள்ளல் முதலியவற்றால் பொறாமை உணர்வை அறிந்து கொள்ள வழி வகுக்கின்றது.

மலர்ந்த முகம், தெளித்த இன்சொல், அடக்கம், அன்பு, ஆசிகாட்டடல் ஆகிய உடலசைவுகள் கருணை உணர்வைக் காட்டும்.

முகம் கழித்தல், 'சை சை' என்று கையை உதறல், கையை இடித்துக் காட்டடல், உம் என்று எரிந்து விழல், பேசல் போன்ற உடலசைவுகளால் இழிவுச்சுவையைக் காணமுடியும்.

உதடும் கண்ணும் சாதாரணமாக இருத்தல், முக விகாரமின்மை, சுபாமாயிருத்தல், தியான பாவனை முதலியவற்றால் அமைதி அல்லது சாந்தம் என்னும் உணர்வைப் பெறமுடியும்.

காதலின்பம், கடவுளின்பம், வெற்றியின்பம் ஆகிய பலவகை இன்பங்கள் உண்டு. சிருங்காரம் என்றால் அழகின்பம், கண்மலர்ந்து, புன்சிரிப்புச் சிரித்து. கைதட்டி, குரலுயர்த்தி, இனிய முறுவல், நாணப்பார்வை, கோணப்பார்வை, மெல்லிய குரல், இன்பத்தைக் காட்டும் உடலசைவை காதல் வெளிப்பாடாக அறிந்து கொள்ளமுடியும்.

அச்சம் என்றும், பயம் என்றும் கூறப்பெறும் உணர்வைக் கூத்துக்கலையில் உடலசைவாய் வெளிப்படுத்தும் போது அஞ்சவரும் பொருளைச் சுட்டி வாயையும், கண்ணையும், அகலத் திறத்தல், புருவஞ் சுருக்கல், கை உயர்த்தல், உடல் நடுக்கம், மார்த்துடிப்பு, பெருமூச்சு, மெல்லிய குரல், பதற்றம் முதலியவற்றால் அச்ச உணர்வை வெளிப்படுத்தும்.

விரிந்த கூந்தல், தலையில் கை வைத்தல், மயிர் பறித்தல், அழுகை, அலமரல், காலை அழுத்தி மிதித்தல், கண்ணை மேலே பார்த்தல், தலையைத் தொங்கப்போடல், முகத்தை முழுந்தாளில் வைத்தல், முன்தானையால் மூடல், கண்ணீர் துடைத்துக்கொண்டு விம்மல், நிலைப்பின்றிப் புலம்பல் முதலியவற்றால் சோகரசம் அல்லது துன்பச்சலையை வெளிப்படுத்துகிறது.

நகைச்சுவையில் உவகைச்சிரிப்பு, பெருநகை, இடிநகை, கேலிச்சிரிப்பு, வஞ்சப்புன்னகை, வெறிநகை, பைத்தியச் சிரிப்பு, இடர்க்கண் நகுதல், செருக்கு நகை எனப்பல வகை உண்டு. உதட்டை மலர்த்தியும் வாயை 'ஒ' எனத் திறத்தும் கை கொட்டியும் குதித்தும் நகைச்சுவையைக் காட்டும்.

வீரம், வில் தெறிப்பது போலக் கையை முன்னே தாக்கல், மார்பில் வலக்கை வைத்துச் சபதங் கூறல், உரத்த பேச்சு, தைரியம், தலை நிமிர்ந்து விழியை அகற்றல், கலைப் பாய்ச்சலில் வைத்தல் முதலியவற்றால் விளங்கும்,

மாதவியின் ஆடல்கலைகளின் வழியாக நாடக அரங்கின் அமைப்பு, இசைக்கருவிகள், பாடலாசிரியனின் இலக்கணம், ஆடலாசிரியனின் இலக்கணம், ஒன்பான் சுவைகள், அவற்றை வெளிப்படுத்தும் தலை அசைவுகள், கண்குறிகள், கைக்குறிகள் ஆகியன அறிந்து கொள்ளலாம்.

**முடிவுரை**

மாதவியின் பதினொரு ஆடல்கலைகளில் உடலசைவுகளும், மன உணர்வுகளும் வெளிப்படுத்தியுள்ளதை அறியமுடிகின்றன. மாதவியின் ஆடல்கலைகளின் வழியாக ஆளுமைப் பண்புகளான உணர்வுகளைக் கையாளுதல் மிக முக்கியப்பங்கு வகிக்கின்றது. குடும்பத்தில், சமுதாயத்தில் பல உணர்வுகள் கொண்டவர்களிடம் இருந்து மனம் பாதிக்கும் உணர்வுகளிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள நல்ல உணர்வுகளை மனதில் தேக்கி, அதை உரிய நேரத்தில் பயன்படுத்தி மனநிறைவோடு வாழ்வதுதான் ஆளுமையின் வெளிப்பாடாகும். இதனை மாதவியின் ஆடல்கலைகளின் வழி அறிந்து தெளிந்து வாழ வழிகாட்டுகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. மாணிக்கவாசகர், சிலப்பதிகாரம், உமா பதிப்பகம், சென்னை.

2. நெல்லை கவிநேசன், ஆளுமைத் திறன் (பாதை தெரியுது பார்), தந்தி பதிப்பகம், சென்னை— 7, இரண்டாம் பதிப்பு — 2015

3. பேராசிரியர் பே.சு.கோவிந்தராசன்;, உலகப்பொதுமறை திருக்குறள், ஆதிபகவன் பதிப்பகம், தருமபுரி -01, இரண்டாம் பதிப்பு -2002.

4. சண்முகம் செட்டியார்.ஆ.கே, சிலப்பதிகாரம் - உரை புகார்க்காண்டம், புதுமலர் நிலையம், கோயம்புத்தூர். முதல்; பதிப்பு செப்டம்பர் 1946.

5. டாக்டர் ரா.சீனிவாசன், சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும் (இணைப்பு — சிலம்பின் கதை) அணியகம் 5, செல்லம்மாள் தெரு, செனாய் நகர், சென்னை — 30, இரண்டாம் பதிப்பு— 1998.

6. த.ஏ.சண்முகம், உளநலவியல், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1970.

*References:*


1. *Manikkavasagar, Silappathikaram,Uma publications, Chennai*
2. *Nellai Kavinesan, Personality Skills (Paathai Theriyuthu paar), Thanthi publications, Chennai-7, Second Edition-2015*
3. *Professor P.S.Govindarasan, Ulagap Pothumarai Thirukkural, Aadhibhagavan publications, Dharmapuri-01, Second Edition-2002.*
4. *A.K. Shanmugam Chettiar, Silappathikaram Commentary — Puhar kandam, puthumalar Nilayam, Coimbatore. First edition September-1946.*
5. *Dr.R.Srinivasan, Silappadhikaram Moolamum prakashvam (Appendix- The story of Silampi) Aniyagam 5, chellammal Street, Shenoy Nagar, Chennai 30, Second Edition -1998.*
6. *T.A. Shanmugam, Psychology, Tamil Publishing Corporation, Chennai. Edition — 1970.*

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com